பொருளடக்கம்



குகைவாசிகள் கொள்கைப் பாதை 7
குகைவாசிகள் பதிப்பகப் பாதை 14
முன்னுரை 21
1 முதல் வாதம் 25
2 இரண்டாவது வாதம் 27
3 மூன்றாவது வாதம் 29
4 நான்காவது வாதம் 30
5 ஐந்தாவது வாதம் 32
6 ஆறாவது வாதம் 34
7 ஏழாவது வாதம் 36
8 எட்டாவது வாதம் 37
9 ஒன்பதாவது வாதம் 38
10 பத்தாவது வாதம் 44
11 பதினொன்றாவது வாதம் 45
12 பன்னிரண்டாவது வாதம் 49
13 பதிமூன்றாவது வாதம் 51
முடிவுரை 52

1

முதல் வாதம்

✿

? *'நாங்கள் அல்லாஹ்வுக்கு இணைவைக்கவில்லை. அல்லாஹ் ஒருவனால் அன்றி வேறு யாராலும் படைக்கவோ வாழ்வாதாரம் வழங்கவோ பலனளிக்கவோ தீங்கிழைக்கவோ முடியாது. அவனுக்கு இணை இல்லை என்று நாங்கள் சாட்சி கூறுகிறோம். முஹம்மது ﷺ அவர்களால் தங்களுக்கே பலனளிக்கவோ தீங்கிழைக்கவோ இயலாது என்றும் நாங்கள் சாட்சி கூறுகிறோம். ஆயினும், நாங்கள் பாவிகள். நல்லோர்கள் அல்லாஹ்விடம் நன்மதிப்பைப் பெற்றிருக்கிறார்கள். ஆகவே, அவர்களின் மூலம் நாங்கள் அல்லாஹ்விடம் வேண்டுகிறோம்.'*

பதில்

அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் எந்த மக்களோடு போரிட்டு, அவர்களைக் கொலை செய்வதையும், அவர்களின் பெண்களை அடிமையாக்கிக்கொள்வதையும் ஆகுமாக்கி வைத்தார்களோ அந்த மக்களும் இதே போன்றுதான் ஏற்றிருந்தார்கள். அவர்களின் சிலைகள் அவர்களுக்காக எதையும் திட்டமிட்டுக் கொடுக்காது என்றும் ஏற்றிருந்தார்கள். ஆனால், அந்தச் சிலைகள் அல்லாஹ்விடம் மதிப்புமிக்கதாக இருக்கும் என்றும், அவை அவர்களுக்காகப் பரிந்து பேசும் என்பதாகவும் நினைத்து அவற்றை வணங்கி வந்தார்கள். அல்லாஹ் மட்டுமே வணங்கப்பட தகுதியானவன் என்ற ஏகத்துவக் கொள்கை அவர்களுக்குப் பலனளிக்கவில்லை.

அல்லாஹ் தன் வேதத்தில் கூறுகிறான்:

وَمَا أَرْسَلْنَا مِنْ قَبْلِكَ مِنْ رَسُولٍ إِلَّا نُوحِي إِلَيْهِ أَنَّهُ لَا إِلَهَ إِلَّا أَنَا فَاعْبُدُونِ

'உமக்கு முன் நாம் அனுப்பி வைத்த எல்லாத் தூதர்களுக்கும் 'என்னைத் தவிர வணக்கத்திற்குரிய வேறு இறைவன் இல்லை. என்னையே வணங்குங்கள்' என்றே அறிவித்திருந்தோம்.' (21:25)

3

மூன்றாவது வாதம்

✿

? *சிலைகளால் தங்களுக்குப் பலனளிக்கவோ தீங்கிழைக்கவோ முடியும் என்று நிராகரிப்பாளர்கள் எண்ணுகிறார்கள். நாங்கள் அவ்வாறு எண்ணுவதில்லை. அல்லாஹ்வால் மட்டுமே நன்மையோ தீமையோ அளிக்க முடியும் என்று நம்புகிறோம். இறைநேசர்களிடம் எவ்வித அதிகாரமும் இல்லை. ஆயினும் நாங்கள் அவர்களின் மூலம் அல்லாஹ்வை நெருங்குகிறோம். அவர்கள் எங்களுக்காக அல்லாஹ்விடம் பரிந்துரைப்பார்கள்.*

பதில்

இவ்வாறுதான் நிராகரிப்பாளர்களும் கூறி வந்தார்கள்.

وَالَّذِينَ اتَّخَذُوا مِنْ دُونِهِ أَوْلِيَاءَ مَا نَعْبُدُهُمْ إِلَّا لِيُقَرِّبُونَا إِلَى اللَّهِ زُلْفَى

‘அவனை விடுத்து வேறு பாதுகாவலர்களை ஏற்படுத்திக் கொண்டவர்கள், ‘அவர்கள் எங்களை அல்லாஹ்விடம் நெருக்கமாக்கி வைப்பார்கள் என்பதற்காகத்தான் நாங்கள் அவர்களை வணங்குகிறோம்’ என்று கூறுகிறார்கள்.’ *(குர்ஆன் 39:3)*

وَيَعْبُدُونَ مِنْ دُونِ اللَّهِ مَا لَا يَضُرُّهُمْ وَلَا يَنْفَعُهُمْ وَيَقُولُونَ هَؤُلَاءِ شُفَعَاؤُنَا عِنْدَ اللَّهِ

‘அவர்கள் அல்லாஹ்வைத் தவிர தங்களுக்குப் பலனையோ, தீங்கையோ அளிக்க இயலாதவற்றை வணங்குகிறார்கள். ‘இவை அல்லாஹ்விடத்தில் எங்களுக்காகப் பரிந்து பேசும்’ என்றும் கூறுகிறார்கள்.’ *(குர்ஆன் 10:18)*

5

ஐந்தாவது வாதம்

✿

? *ஏகத்துவக் கொள்கையைச் சரியான முறையில் பின்பற்றி நடப்போரை பார்த்து, 'நீங்கள் நபி ﷺ அவர்களின் பரிந்துரையை மறுக்கிறீர்கள்' என்று சொல்கிறார்கள்.*

பதில்

நாங்கள் நபியவர்களின் பரிந்துரையை மறுக்கவில்லை; அதை விட்டு விலகியிருக்கவும் இல்லை. உண்மையில் நபி ﷺ அவர்கள் பரிந்துரை செய்பவராகவும் பரிந்துரை ஏற்கப்படுபவராகவும் உள்ளார்கள். நபியவர்களின் பரிந்துரையை விரும்புகிறோம். ஆயினும் பரிந்துரையின் முழு அதிகாரம் அல்லாஹ்விடமே உள்ளது.

قُلْ لِلَّهِ الشَّفَاعَةُ جَمِيعًا

'பரிந்துரை முழுவதும் அல்லாஹ்வுக்கே உரியன என்று நீர் கூறுவீராக.' *(குர்ஆன் 39:44)*

அல்லாஹ் அனுமதியளித்த பின்னரே நபி ﷺ அவர்கள் பரிந்துரைக்க முடியும்.

مَنْ ذَا الَّذِي يَشْفَعُ عِنْدَهُ إِلَّا بِإِذْنِهِ

'அவனுடைய அனுமதியின்றி அவனிடம் பரிந்துபேசுபவர் யார்?' *(குர்ஆன் 2:255)*

அல்லாஹ் யாருக்கெல்லாம் அனுமதியளித்துள்ளானோ அவர்களுக்காக மட்டுமே பரிந்துரைக்க முடியும்.

وَلَا يَشْفَعُونَ إِلَّا لِمَنِ ارْتَضَى

'அவனது விருப்பமின்றி யாருக்கும் அவர்கள் பரிந்து பேசமாட்டார்கள்.' *(குர்ஆன் 21:28)*

8

எட்டாவது வாதம்

✿

? *ஷிர்க் என்பது சிலைகளை வணங்குவதாகும். நாங்கள் சிலைகளை வணங்குவதில்லையே?*

பதில்

சிலைகள்தான் படைக்கும்; உணவளிக்கும்; தம்மை அழைப்பவர்களின் செயல்பாடுகளைத் தீர்மானிக்கும் என்று சிலைகளை வணங்குபவர்கள்கூட நம்பிக்கை கொள்ளவில்லை.

ஒரு கல்லை, சுச்சியை அல்லது சமாதியிலோ வேறு எதனிலோ உள்ள செங்கல்லை நாடிப்போய் வணக்கம் புரிவதும் சிலை வணக்கம்தான். அன்றைய கால அறபியர்கள் அவற்றை வணங்கி, அவற்றுக்காகப் பிராணிகளைப் பலியிட்டு வந்தார்கள். அவை அல்லாஹ்வின்பால் எங்களை நெருக்கமாக்கி வைக்கும் என்றும், எங்களுக்கு ஏற்படவிருந்த சோதனைகளை அவற்றின் பரக்கத்தினால் அல்லாஹ் அகற்றுவான் அல்லது ஏதேனும் கொடுப்பான் எனவும் கூறிவந்தார்கள்.

சமாதிகளில் நீங்கள் செய்கின்ற செயலும் சிலைகளுக்கருகில் அவர்கள் செய்கின்ற செயலும் ஒன்றாகத்தான் இருக்கிறது. இதனால்தான் உங்களின் செயல்பாடுகளும் சிலைவணக்கமாகி விடுகிறது.

சிலைகளை வணங்குவது மட்டுமே ஷிர்க்கா என்ன? வானவர்கள் மற்றும் இறைத்தூதர்களை வணங்கி வந்தவர்களையும் அல்லாஹ் நிராகரிப்பாளர்கள் என்றே கூறுகிறான்.

11

பதினொன்றாவது வாதம்

✿

? *'லா இலாஹ இல்லல்லாஹ்' என்று சொன்ன மனிதரைக் கொலை செய்த உசாமாவை நபியவர்கள் கடுமையாகக் கண்டித்தார்கள். 'மக்கள் லா இலாஹ இல்லல்லாஹ் என்று கூறும்வரை அவர் களுடன் நான் போர் புரியுமாறு ஏவப்பட்டுள்ளேன்' என்று நபியவர்கள் கூறியுள்ளார்கள். மேலும் 'லா இலாஹ இல்லல் லாஹ்' என்று கூறியவரைப் பார்த்து காஃபிர் என்று கூறக் கூடாது என்பதை வலியுறுத்தும் ஏராளமான நபிமொழிகள் காணப்படுகின்றதே?*

பதில்

யூதர்கள் 'லா இலாஹ இல்லல்லாஹ்' என்று சொல்லியிருந்தும் நபியவர்கள் அவர்களுடன் போரிட்டார்கள்; அவர்களைக் கைது செய்தார்கள். முன்பு சொன்னதை இவ்விடத்தில் நினைவுகூர வேண்டும்.

ஹனீஃபா கோத்திரத்தார் அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரிய வேறு இறைவன் இல்லை, முஹம்மது ﷺ அவனது தூதராக இருக்கின்றார் என்று சாட்சி கூறினார்கள்; தொழுதார்கள்; தங்களை முஸ்லிம்கள் என்றும் கூறிக்கொண்டார்கள். இருந்தும் நபித்தோழர் கள் அவர்களுடன் போர்புரிந்துள்ளார்கள்.

அலீ இப்னு அபீ தாலிப் ؓ யாரையெல்லாம் நெருப்பிலிட்டு கொளுத்தினார்களோ அவர்களும் 'லா இலாஹ இல்லல்லாஹ்' என்று கூறியவர்கள்தாம்.

ஒருவன் லா இலாஹ இல்லல்லாஹ் சொல்லியிருந்தாலும் மறுமை யில் மீண்டும் உயிர் கொடுத்து எழுப்பப்படுவதை மறுத்துவிட்டால் அவன் காஃபிராகிவிடுவான். ஒருவன் லா இலாஹ இல்லல்லாஹ் சொல்லியிருந்தும் இஸ்லாமின் கடமைகளில் எதையேனும் ஒன்றை

13

பதிமூன்றாவது வாதம்

✿

? *நபி இப்றாஹீம் ﷺ அவர்கள் நெருப்புக் குண்டத்தில் போடப் பட்டபோது ஜிப்ரயீல் ﷺ ஆகாயத்தில் காட்சி தந்து இப்றாஹீ மிடம், 'உங்களுக்கு நான் உதவி செய்யட்டுமா' என்று கேட்டார். அதற்கு இப்றாஹீம், 'உங்கள் உதவி எனக்கு வேண்டாம்' என்று கூறினார். ஜிப்ரீலிடம் உதவி தேடுவது ஷிர்க்காக இருந்திருந்தால் உதவி தேவையா என்று இப்றாஹீமிடம் அவர் கேட்டிருப்பாரா?*

பதில்

செயல்படுத்துவதற்குச் சாத்தியமான விசயத்தையே ஜிப்ரீல் ﷺ முன்வைத்தார். அல்லாஹ் ஜிப்ரீலுக்கு அனுமதியளித்திருந்தால் அவருக்கு வழங்கப்பட்ட ஆற்றலைக்கொண்டு இப்றாஹீமை அவர் காப்பாற்றியிருப்பார். ஏனெனில், ஜிப்ரீலைப் பற்றி அல்லாஹ்

شَدِيدُ الْقُوَى

'அவர் வல்லமை மிக்கவர்' (53:5) என்று கூறுகிறான்.

இப்றாஹீம் ﷺ அவர்களுக்காக மூட்டப்பட்டிருந்த நெருப்பையும் அதைச் சுற்றியிருந்த எரிபொருள்களையும் நாலாபுறங்களிலும் வீசிவிட வேண்டும் என்றோ, இப்றாஹீமை அந்த இடத்தை விட்டு தூரமான வேறிடத்திற்குக் கொண்டு சென்றுவிட வேண்டும் என்றோ, அவரை வானத்தின் பக்கம் உயர்த்திவிட வேண்டும் என்றோ அல்லாஹ் ஜிப்ரீலுக்குக் கட்டளையிட்டிருந்தால் அவர் அவ்வாறே செய்திருப்பார்.

இது, ஒரு பணக்காரர் ஏழையிடம் வந்து, 'உனக்குக் கடன் கொடுத்து உதவி செய்யட்டுமா அல்லது அன்பளிப்பு செய்யட் டுமா?' என்று கேட்பதைப்போலாகும். இது அவருடைய சக்திக்குட் பட்ட விசயம்தான். இது ஷிர்க் அல்ல.